# தவக்காலம் முதல் வாரம் - ஞாயிறு

# இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

தவக்காலம் ஒரு வசந்த காலம். பயங்கர குளிருக்குப் பின்னர் இலைகள் உதிர்ந்து, புதிய தளிர் வரும் காலம். அருளின் காலம். மன்னிப்பின் காலம். நம்பிக்கையின் காலம். மாற்றத்தின் காலம். கிறிஸ்து என்ற தளிர் நம்மிலே வளர்ந்திட, பாவம் என்ற இலைகளை உதிர்க்கின்ற காலம்.

இந்த முதல் வாரத்தின் ஞாயிறு பலிக்கு வந்துள்ள உங்களை அன்புடனே வரவேற்கின்றோம். இக்காலம் நலமாக அமைய வாழ்த்தி செபிக்கின்றோம்.

சாத்தானால் சோதிக்கப்பட்ட நிகழ்வினை தியானிக்கும் இறை வார்த்தைகளை கொண்டது இந்த ஞாயிறு. சோதனைகள் இல்லாத மனிதனே இல்லை. சோதனைகளில் வீழ்ந்து வாழ்விழந்த மனிதர்கள் உண்டு. சோதனைகளை சாதனையாக்கிக் கொண்ட உள்ளங்களும் உண்டு. நாம் பாடம் கற்க வேண்டியவர்கள் இரண்டாமவர்களே. சாதனையாக்கி சரித்திரம் படைக்கவே இந்த அருட்சாதன கொண்டாட்டம் துணை நிற்கின்றது.

அருள் பெறுவோம். சாதிப்போம். சரித்திரம் படைப்போம். இறைவார்த்தையை கருவியாக கொண்ட வீழ்த்த நினைத்த சாத்தானை, அதே இறைவார்த்தையை சம்மட்டியாக்கி சாத்தானை விரட்டியடித்து சரித்திரம் படைத்தவர் நம்மோடு இருக்கின்றார். நம்பிக்கையோடு பயணிப்போம்.

## முதல் வாசக முன்னுரை (தொடக்க நூல் 9:8-15)

உலகையும் அதை ஆண்டு நடத்த மனிதரையும் படைத்த கடவுள் உலகில் பாவம் மிகுவதைக் கண்டு வருந்துகிறார். நோவா மற்றும் அவருடைய குடும்பம் தவிர மற்றெல்லா மனிதரையும் வெள்ளப் பெருக்கால் அழித்துவிடுகிறார். வெள்ளப் பெருக்கு முடிந்ததும் கடவுள் நோவாவுடன் ஓர் உடன்படிக்கை செய்கிறார். உலகத்தில் பேரழிவு கொணர்கின்ற வெள்ளப் பெருக்கால் கூட கடவுளின் நிலையான அன்பை அழித்துவிட இயலாது என்று வெளிப்படுத்தும் இன்றைய முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

(அல்லது)

நோவாவும் அவருடைய குடும்பமும் காக்கப்பட்டு, கடவுள் அவர்களோடு ஓர் உடன்படிக்கை செய்கிறார். பிற்காலத்தில் இஸ்ரயேல் மக்கள் எகிப்து நாட்டில் அடிமைகளாக இருந்து விடுதலை அடைந்ததுபோல நோவாவும் ஆபத்திலிருந்து விடுதலை பெற்றார். அவருக்குப் புதுவாழ்வு கிடைத்தது; அவர் வழியாக மனித இனத்திற்கே புதிய வாழ்வு மலர்ந்தது. இப்புதிய வாழ்வின் வெளி அடையாளமாகக் கடவுள் வானவில்லைத் தோற்றுவிக்கிறார். கடவுள் நம்மை அன்புசெய்து, நமக்குப் பாதுகாப்பு அளித்து நமக்கு நம்பிக்கை தருகிறார் என்று கூறும் இன்றைய முதல் வாசகத்திற்கு செவி கொடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை (1 பேதுரு 3:18-22)

கிறிஸ்துவர்கள் வேதனையை மகிழ்ச்சியோடு ஏற்று அனுபவிக்க வேண்டும். அப்பொழுது கடவுள் அவர்களோடு இணைந்து நட்புறவு கொள்கிறார். அவர்களை மலை அளவுக்கு உயர்த்தவும் செய்கிறார் என்பதை இன்றைய இரண்டாம் வாசகம் தெளிவாகக் கூறுவதைக் கேட்போம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**


மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com